**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.19/2022** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 4** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | சுகன்யா | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **08.08.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் மேலமாத்தூரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன கருப்பையா என்னுடைய பெரியப்பா ஆவார். அவருக்கு ஒருமகன், ஒரு மகள் உண்டு. அ.சா.1 என் அப்பா. 22.01.2021ம் தேதி இரவு 12.45 மணியளவில் எனக்கு போன் வந்தது. சின்னதுரை செய்தார். என்அப்பா கத்தி காயத்தோடு வந்திருப்பதாகவும், என்தம்பிக்கு போன் செய்து எடுக்கவில்லை என்றும், நீ உடனே புறப்பட்டு வா என்று சின்னதுரை சொன்னார். நானும், என்அம்மாவும் புறப்பட்டு கரம்பியம் போனோம். அங்கு அப்பா உட்கார்ந்து இருந்தார். அவருக்கு Bleeding அதிகமாக இருந்தது. ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வர சொல்லிவிட்டு நான், என்அப்பா, சின்னதுரை ஆகியோர்கள் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு போனோம். அப்போது அண்ணனும் காயம்பட்டு அங்கு இருப்பதாக சொன்னார். என்தம்பி தான் என்பெரியப்பாவை தேடி சென்றான். அவன் போய் தூக்கி வந்தான். இறந்துவிட்டார் என்று தெரிந்தபின்னர் அமரர் ஊர்திக்கு போன் செய்து பெரம்பலூர் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சொத்தை நான் விற்பேன் என்று எதிரி தகராறு செய்து கத்தியை எடுத்து பெரியப்பாவின் வயிற்றில் குத்தியுள்ளார். பெரியப்பா கத்தியவுடன் வெளியில் வந்து பார்த்போது என்அப்பாவின் விலா, தொடை , இடதுகையில் எதிரி குத்திவிட்டார். போலிசார் அரியலூருக்கு வந்து என்னையும், என்அப்பாவையும் விசாரித்தார்கள். என்அப்பா நடந்ததை சொன்னார். அதே போலிசார் நோட் பண்ணினார்கள். போலிசர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தற்போது நான் நீதிமன்றத்தில் சொன்னவிவரத்தை தான் போலிசார் விசாரிக்கும்போது சொன்னேன். போலிசார் என்னுடைய போனை வாங்கி என்ன நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது என்று பார்த்தார்கள். போனை கொடுத்தேன். போலிசார் விசாரிக்கும்போது போன் நம்பரை சொல்லவில்லை. கரம்பியத்திற்கு அன்று இரவு எப்படி சென்றோம் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. சொத்து சம்மந்தமாக தகராறு செய்ததில் மற்றும் கத்தியால் குத்தியது எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது. அ.சா.1 என்அப்பா என்பதாலும், இறந்துபோனவர் என் பெரியப்பா என்பதாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன விதத்தில், நேரத்தில் கரம்பியம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.